## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்

## வினா விடை நேரம்

## வினா எண் 317

## தலைப்பு  நம்பிக்கை மற்றும் இறை பக்தியின் சக்தி

### நம் அன்பிற்குரிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 228-233 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி: ஸ்வாமி தங்களின் பெருங்கருணையினாலேயும் மேலும் தங்களின் அருளுரைகளை கேட்பதானாலும் நாங்கள் இறை பக்தியின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டோம்.பக்திக்கு அடிப்படை திட நம்பிக்கை என்பதும் புரிகிறது.

இந்த திட நம்பிக்கையை நாங்கள் எவ்வாறெல்லாம் வளர்த்து கொள்ள முடியும் என்பதை எங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :

உங்கள் கேள்வியே தவறானது.நம்பிக்கை என்பது கடையில் வாங்ககூடிய ஒரு பொருள் அல்ல.விஸ்வாஸம் என்பது உங்களின் ஸ்வாஸம் போல் உங்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது.

உங்கள் தினசரி வாழ்வில் நீங்கள் செய்கின்ற செயல்கள் எல்லாம் நம்பிக்கையை அடிப்படையாக கொண்டதுதான்.

உங்கள் விலை உயர்ந்த துணிகளை சலவை தொழிலாளியிடம் தருகிறீர்கள்.அது அவர் மீது உள்ள நம்பிக்கையினால் தானே.தங்கத்தை பொற் கொல்லரிடம் நகை செய்வதற்காக கொடுக்கிறீர்கள்

அதுவும் அவர் மீது உள்ள நம்பிக்கையினால் தானே.

முடி திருத்தும் தொழிலாளியிடம் ஒவ்வொரு மாதமும் உங்கள் தலையையே ஒப்படைக்கிறீர்கள்.அதுவும் நம்பிக்கையினால் தானே.அது போல் மருத்துவர் உங்கள் உடலை கீறி ஆபரேஷன் செய்யவும் அனுமதிக்கறீர்கள்.எனவே நம்பிக்கை என்பது கடவுள் மனிதனுக்கு கொடுத்துள்ள

கொடையாகும்.நம்பிக்கை இல்லா மல் இருப்பது இயற்கைக்கு முரணானது.செயற்கையானது.
இங்கே வருந்தத் தக்கது என்னவென்றால் மனிதன் மற்ற அனைவரிடமும் நம்பிக்கை வைக்கிறான்.
ஆனால் கடவுளிடம் முழு நம்பிக்கை வைப்பதில்லை.இது மிகவும் துரதிருஷ்ட்டமானது அல்லவா.
இறை பக்தியும் நம்பிக்கையும் ஒரு பறவையின் இரண்டு இறக்கைகள் போல ஒரு சைக்கிளின் இரு சக்கரம் போல உயிரினங்களின் இரண்டு கண்களை போல இயல்பானதாக அமைய வேண்டும்.
நம்பிக்கை இல்லாவிட்டால் எறும்பு கூட நகராமல் நின்றுவிடும்.நம்பிக்கை இல்லை என்றால் பறவை கூட அதிக உயரம் பறக்காது.
பறவை மரக்கிளையில் போய் அமர்வது அந்த கிளை காற்றில் ஒடிந்து விடாது என்பதால் அல்ல
எந்த சூழ்நிலையிலும் தன்னால் பறந்து தப்பிக்க முடியும் என்று தன் இறக்கை மீது கொண்ட நம்பிக்கையினால்தான்.
எனவே எல்லாமே நம்பிக்கையை அடிப்படையாக கொண்டது தான்.

நாள் காட்டி கேலண்டர் காட்டுகின்ற தேதியை ஏற்கிறீர்கள்.
செய்திதாள்கள் தொலைகாட்சி ரேடியோ இவைகளை நம்புகிறீர்கள். ஆனால் பண்டைகாலத்து ரிஷிகளும் ஞானிகளும் கொடுத்துள்ள புனித நூல்களையும் வேதங்களையும் நம்ப மாட்டீர்களா.
வேதங்கள் என்பது கடவுள் நேரடியாக மனித குலத்துக்கு அளித்ததாகும்.
அதை நம்பாதிருப்பது மிகவும் துரதிருஷ்ட்டமானதாகும்.
இப்படி நம்பிக்கையும் இறை பக்தியும் இல்லாதிருப்பது சரிதானா என யோசியுங்கள்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி சில மனிதர்கள் இறை பக்தியே இல்லாமல் இருக்கத்தானே செய்கிறார்கள்.அவர்கள் வாழ்க்கையில் இறை பக்திக்கு இடமே இருப்பதில்லையே.அது ஏன் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
காரணம் மிக எளிதானது.
அவர்கள் உலகியல் இன்பங்களில் மூழ்கி திளைத்து கொண்டிருக்கிறார்கள்.

அளவுக்கு அதிகமான ஆசைகள்,காற்றிலே மணல் கோட்டை கட்டுவது என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.தங்கள் தகுதிக்கு மீறி ஆசைபடுவது, குடும்பத்தின் மீது அதீத பாசம் வைப்பது வெளி உலகத்தின் மீதே நாட்டம் கொண்டிருப்பது இவைகளெல்லாம் அவர்கள் இறை பக்தி இல்லாதவர்களாக இருக்க காரணமாகும்.

குழந்தைகள் ஸீஸா என்ற விளையாட்டு விளையாடுவது தெரியுமல்லவா.அது போலவே வெளி உலகத்தின் மேல் நாட்டம் அதிகமானால் இறைவன் மீது அன்பு இல்லாமல் போய்விடுகிறது.
மாறாக வெளி உலக நாட்டம் குறையும் போது இறைவன் மீது அன்பு அதிகமாகிறது.

ஒரு காந்தம் இரும்பு துண்டுகளை தன் பால் ஈர்க்கிறது.ஆனால் அந்த இரும்பு துண்டுகள் தூசடைந்திருக்கு மேயானால் அவை ஈர்க்க படுவதில்லை.
அது போல் மனம் உலக இன்பங்களுடன் மூழ்கியிருக்கும் வரை தெய்வீகம் என்ற காந்தத்தால் ஈர்க்க படுவதில்லை.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் ஆன்மீக பயற்சிகளில் எப்படி ஈடுபட வேண்டும்,எப்படி தொடர வேண்டும்,அதில் நாங்கள் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் யாவை என்பது பற்றி எடுத்துச் சொல்லி எங்களுக்கு வழி காட்டுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
நீங்கள் செய்கின்ற எந்த செயலுமே வரம்பிற்குட்பட்டதாக இருக்க வேண்டும்.
வரம்பு மீறும் போது நீங்கள் ஆபத்துக்களை சந்திக்க வேண்டியிருக்கும்.
ஒரு நதியானது இரண்டு கரைகளுக்கும் இடையில் ஓடும் போது பாசனத்திற்கு உதவியாக இருக்கிறது.
அது போல் ஒரு போதும் சந்தேகப்படாமல் இருப்பது மற்றும் நம்பிக்கையுடன் ஆன்மீக பயற்சிகளில் ஈடுபட்டு மெய்யுணர்வை பெறுவது இந்த இரண்டும் மனித வாழ்கையின் இரு கரைகளாகும்.
உங்கள் நம்பிக்கை ஒரு போதும் குன்றிவிட கூடாது.ஒரு போதும் தளர்ந்து விட கூடாது.

எந்த பாதகமான சூழ்நிலையிலும் எதிர் மறையான காலத்திலும் இறை நம்பிக்கையை விட்டுவிட கூடாது.

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை என்பது ஓட்டைகள் நிறைந்த பானையை போன்றது.

எப்படி ஒரு செடியின் வேர்களிலே நீர் பாய்சுகிறோமோ அது போல் உங்கள் வாழ்க்கையின் வேரிலே நம்பிக்கை என்னும் நீரை பாய்ச்ச வேண்டும்.அதை விடுத்து எப்போதும் சந்தேக பட்டு கொண்டே இருந்தால் அனைத்தும் வீணாகி விடும்.

நீங்கள் எப்பேர்பட்ட அறிவாளியாக இருந்தாலும் சந்தேகம் வந்து விட்டால் எதுவுமே உங்கள் உதவிக்கு வராது.

ஒரு பண்டிதர் தன்னுடைய பணிப்பெண் தினமும் தாமதமாக பால் கொண்டுவருவதற்காக அவரை கடிந்து கொண்டார்.

பணிப்பெணோ தினமும் தான் நதியை கடந்து படகில் வரவேண்டியிருப்பதால் தாமதமாவதாக சொன்னார்.

பண்டிதரோ

நீ தினமும் இறை நாமத்தை சொல்லி கொண்டே வந்தால் நதி உனக்கு வழி விடும்.நீ படகுக்கு காத்திராமல் உடனே வந்து விடலாம் என்றார்.

பண்டிதர் சொன்னதை பணிப்பெண் முழுவதுமாக நம்பினார்.அதேபோல் செய்து மறு நாள் தாமதம் இல்லாமல் வந்து பண்டிதரிடம் நீங்கள் சொன்னபடி இறை நாமத்தை ஜபித்தவுடன் நதி வழி விட தாமதமில்லாமல் வந்து விட்டேன் என்றார்.

அதை நம்பாத பண்டிதர் திரும்பி செல்லும் போது நானும் வருகின்றேன் என சொல்லி உடன் சென்றார்.

அந்த பணிப்பெண் நம்பிக்கையுடன் இறை நாமத்தை சொன்னவுடன் நதி வழி விட்டது.பண்டிதரும் அதேபோல் செய்ய எண்ணி நீரில் இறங்கினார்.ஆனால் சந்தேகத்துடன் வேட்டி நனைந்து விடுமோ என்று வேட்டியை தூக்கி பிடித்தபடி இறங்கினார்.

நதி அவருக்கு வழி விடாததால் நீரில் மூழ்கினார்.

அவருடைய சந்தேகம் உண்மையானதால் அவர் மூழ்கினார்.ஆனால் நம்பிக்கை உண்மையானதால் பணிப்பெண் ஆற்றை கடந்தார்.

மனித வாழ்கையின் அக்கரையே சிரத்தா அதாவது நம்பிக்கை,நேர்மை மற்றும் உறுதிப்பாடு ஆகும்.அதுவே ஞானத்தை பெற்று தரும்.

நீங்கள் செய்கின்ற வேலையை எப்போதும் நம்பிக்கையுடன் விரும்பி செய்ய வேண்டும்.அப்போது அது நேர்மையான செயல்பாடாக அமையும்.

அனைவருக்கும் நன்றி.
வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் அருளுரைகளை தொடர்ந்து சிந்திப்போம்.

ஜெய் சாயிராம்.